**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

நாள் : 12 .06.2023 3 STC 404/2022

**பெயர் : பி. சரவணன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு எத்தனை வருடமாக பழக்கம் என்ற விபரத்தை சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சிறுவயது முதல் எனக்கு பழக்கம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.காம்.சி.ஏ படித்துள்ளேன். நான் எத்தனை வருடமாக வங்கியில் கணக்கு பராமரித்து வருகிறேன் என்றால் 2010 ம் ஆண்டில் இருந்து பராமரித்து வருகிறேன். எனக்கு வங்கியின் விதிமுறைகள் தெரியும் என்றால் சரிதான். 2016 ல் பணமதிப்பிழப்பு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. பணமதிப்பிழப்பு செய்தததற்கு பின்னிட்டு யார் ஒருவருக்கும் ரூ.20,000 த்திற்கு மேல் பணம் கொடுக்கவேண்டும் என்றால் வரைவோலை அல்லது காசோலை மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது வரை மேற்படி விதிமுறைபற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எப்போது வங்கிக்கு சென்றேன் என்றால் நான் அடிக்கடி வங்கி சென்று வந்து கொண்டு தான் இருப்பேன். வங்கியில் மேற்படி விதிமுறைகளை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3. நான் எம்.காம் படித்துள்ளதால் யார் ஒருவருக்கும் ரூ.20,000 த்திற்கு மேல் பணம் கொடுக்கவேண்டும் என்றால் வரைவோலை அல்லது காசோலை மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்ற விபரம் வங்கிக்கு அடிக்கடி சென்று வருவதால் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் மேற்கண்டவாறு வங்கி மூலமாகவோ, வரைவோலை அல்லது காசோலையாக கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் பணம் எதிரிக்கு எங்குவைத்து கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. உண்மையில் எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தால் எத்தனை ரூபாய் நோட்டுகள் எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் வைத்து கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 05.07.2022 ல் பணம் கேட்டார். 05.07.2022 தேதியிலேயே எதிரிக்கு பணம் கடன் கொடுத்தேன். நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

**பெயர் : பி. சரவணன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

5. 05.07.2022 ல் என்னிடம் ரூ.2 லட்சம் பணம் இருந்தது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ.2 லட்சம் பணம் எவ்வாறு வந்தது என்றால் நான் சீட்டு நடத்தி வருகிறேன் அந்த தொகையை வைத்து கொடுத்தேன். நான் சீட்டு கம்பெனி வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிராமத்தில் தெரிந்த நபர்களை வைத்து நடத்தி வருகிறேன். சீட்டு தொகைக்கு கணக்கு வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. பேப்பரில் மட்டும் எழுதி வைத்துள்ளேன். நான் சீட்டு எதுவும் நடத்தவில்லை என்றும், அவ்வாறு நடத்தி வந்தால் முறையாக பதிவு செய்து கணக்கு வழக்குகள் பராமரித்து வருவேன் என்றால் சரியல்ல.

6. காசோலை வசூலுக்கு தாக்கல் செய்த பிறகு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் not arranged for refer to drawer என திருப்பப்பட்டது. காசோலை எந்த தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 04.08.2022 தேதியிட்டு எதிரி எனக்கு காசோலை கொடுத்தார், நான் 05.08.2022 ல் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். எதிரியிடம் கேட்டபோது அடுத்த நாள் வசூலுக்கு தாக்கல் செய்யச்சொன்னார். எனவே காசோலை தேதிக்கு அடுத்த நாள் வசூலுக்கு தாக்கல் செய்தேன். எதிரியிடம் தொலைபேசியில் அழைத்து கேட்டேனா என்றால் இல்லை, நேரில் கேட்டேன்.

7. எதிரியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால் தெரியும், 9842784311 ஆகும். எதிரிக்கு போன் செய்தால் எடுக்கமாட்டார். நான் கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ள முகவரி என்ன என்றால் SR நெட் பார்க் என்ற பெயரில் சி.எம். காம்பளக்ஸ் சரவணா தியேட்டர் அருகில், சேலம் மெயின் ரோடு என்ற முகவரியில் வைத்துள்ளேன். சி.எம். காம்பளக்ஸ்-ல் என்னென்ன கடைகள் உள்ளது என்றால் ஆட்டோ கன்சல்டிங் மற்றும் ஆட்டோ பைனான்ஸ் தரைதளத்தில் உள்ளது, நான் மாடியில் கடை வைத்துள்ளேன், மேற்படி காம்பளக்ஸ்-ல் ஆட்டோ பைனான்ஸ், கல்யாண் ஜுவல்லர்ஸ் நகைத்திட்டத்திற்கான அலுவலகம் உள்ளது.

8. மேற்படி காம்பளக்ஸ் திருப்பதி பைனான்ஸ் என்ற நிறுவனம் உள்ளது என்றால் இல்லை. மேற்படி திருப்பதி பைனான்ஸ் உள்ளதா என நான் சொன்ன கடைகளில் உள்ளவர்களை விசாரித்தால் தெரியும் என்றால் தெரியும். எதிரி மேற்படி திருப்பதி பைனான்ஸ்ல் கடன் வாங்கியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் மேற்படி திருப்பதி பைனான்ஸ்-ல் ஒரு பங்குதாரர் என்றால் அந்த பைனான்ஸ்-க்கும் எனக்கும் சம்பந்தமும் இல்லை. மாதம் மாதம் திருப்பதி

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**பெயர் : பி. சரவணன் - வா.சா.1**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பைனானஸ்-க்கு தவணை முறையில் பணம் செலுத்தியுள்ளார் என்றும், அந்த இரசீதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு திருப்பதி பைனான்ஸ்-ல் வேலையில் இருந்தேன், அப்போது நிறுவனத்தை பார்த்துக்கொண்டிருந்ததால் இரசீதிகளில் கையெழுத்து போட்டிருப்பேன்.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- சாட்சி : **பி. சரவணன்**

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1
ஈரோடு.